செ.வெ.எண் :- 116

நாள் :- 07-02-2012.

# செய்தி வெளியீடு

நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் மானியக் கோரிக்கைகள் தொடர்பான வரவு–செலவு கூட்டத் தொடர் துவங்கப்படுவதற்கு முன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துறை வாரியான ஆய்வுக் கூட்டங்களை நடத்துவது வழக்கம்.

அந்த வகையில், 2012–2013 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு கூட்டத் தொடர் தொடங்கப்படுவதற்கு முன்னர், உள்துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் இன்று (7.2.2012) துவங்கியது. இந்தக் கூட்டத்தில், உள்துறை தொடர்பாக நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவேண்டிய பொருட்கள் குறித்து விரிவாக ஆய்வு நடத்தப்பட்டது.

இது போன்று, பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தொடர்ந்து நடைபெறும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 7.2.2012